

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, தலைமையில் தீரன் சின்னமலையின் 221 வது நினைவுநாளை ஒட்டி அரசு போக்குவரத்து கழக அலுவலக வளாகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள். அருகில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், எம்.எல். ஏ. கதிரவன் , பொருளாளர் துரைராஜ் , தொ.மு.ச. அமைப்பாளர் குணசேகர் மற்றும் கழக நிர்வாகிகள் விஜயா ஜெயராஜ், மோகன்தாஸ், ராமதாஸ், புஷ்பராஜ், கலைச்செல்வி, பவுல்ராஜ் , மூவேந்திரன் பந்தல் ராமு உள்ளிட்ட கலர் கலந்து கொண்டனர்.

### அனைவரையும் உள்ளடக்கிய

# நகர்ப்புற இயக்கத்தை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

## மக்களவையில் - எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 8 –

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், ஆகஸ்ட் 6, அன்று மக்களவையில், நகர்ப்புறங்களில் போதிய நடைபாதை வசதிகள் இல்லாமை, பாதுகாப்பற்ற நடைபாதைகள், போக்குவரத்து நெரிசல், தனியார் வாகனங்களை அதிகம் சார்ந்திருக்கும் நிலை, நடைபயிற்சி மற்றும் பொது போக்குவரத்தை மையமாகக் கொண்ட நகர்ப்புற வளர்ச்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நகர்ப்புற இயக்கத்தை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் டோகன் சாஹு அவர்கள் அளித்த பதிலில், அரசியலமைப்பின் பன்னிரண்டாவது அட்டவணையின்படி நகரத் திட்டமிடல், சாலைகள், நடைபாதைகள் மற்றும் நகர்ப்புற போக்குவரத்து கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகியவை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அதிகார அமைப்புகளின் பொறுப்பு என தெரிவித்தார். மாநில அரசுகள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முயற்சிகளுக்கு கொள்கைகள், வழிகாட்டுதல்கள், தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் நிதி உதவி மூலம் ஒன்றிய அரசு ஆதரவு அளித்து வருவதாகவும் கூறினார்.

நடைபாதை வசதிகள், மிதி வண்டி போக்குவரத்து, பொது போக்குவரத்து முன்னுரிமை மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற போக்குவரத்தை மேம்படுத்த நகர்ப்புற மற்றும் பிராந்திய மேம்பாட்டு திட்ட வடிவமைப்பு மற்றும் செயல்படுத்தல் வழிகாட்டுதல்கள், 2014, தேசிய நகர்ப்புற போக்குவரத்துக் கொள்கை, 2006 மற்றும் மெட்ரோ ரயில் கொள்கை, 2017 ஆகியவற்றை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இவ்வழிகாட்டுதல்களில் நடைபாதைகள், மிதி வண்டிப் பாதைகள், பொது போக்குவரத்து அணுகல் மற்றும் கடைசி மைல் இணைப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அடல் நகர்ப்புற புத்துயிரூட்டல் மற்றும் மாற்றத்திற்கான இயக்கம் திட்டத்தின் கீழ், இதுவரை 431 கி.மீ. நடைபாதைகள்/நடப்புப் பாதைகள் மற்றும் 43 கி.மீ. தனிப்பட்ட மிதிவண்டிப் பாதைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். மேலும், பிரதம மந்திரி மின்சார பேருந்து சேவைத் திட்டத்தின் கீழ், 100க்கும் மேற்பட்ட நகரங்களில் 10,000 மின்சார பேருந்துகள் இயக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும்,

இது பொது போக்குவரத்து வசதியை மேம்படுத்தி, தனியார் வாகன சார்பை குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த நகர்ப்புற இயக்கத்தை ஊக்குவிக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும், போக்குவரத்து மையப் படுத்தப்பட்ட நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவிக்க, எட்டு மாநிலங்களில் 39 போக்குவரத்து மைய வளர்ச்சி வழித்தடங்கள் அறிவிக்கப் பட்டுள்ளதாகவும், இதன் மூலம் அதிக அடர்த்தி கொண்ட வளர்ச்சி, சிறந்த கடைசி மைல் இணைப்பு மற்றும் ஒருங்கிணைந்த பொது போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும், ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை மாண்புமிகு இணை அமைச்சர் திரு. டோகன் சாஹு அவர்கள், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

### காளிங்கராயன் – கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு

# பவானிசாகர் அணையிலிருந்து உடனே தண்ணீர் திறந்து விடுக!

## தலைமைச் செயலாளருக்கு - ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. கடிதம்!



ஈரோடு, ஆக. 8-

ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி, போர்க்கால அடிப்படையில் காலிங்கராயன் வாய்க்கால் மற்றும் லோயர் பவானி (LBP) நீர்ப்பாசனத்திற்காக உடனடியாக நீரைத் திறந்துவிடக் கோரி ஈரோடு தொகுதி மக்களவை உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலருக்கு அவசரக் கடிதம் அனுப்பியுள்ளார்.

கழகத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. கூறியிருப்பதாவது:-

ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் விவசாயம் பெருமளவில் பவானிசாகர் அணை பாசன நீரைச் சார்ந்துள்ளது. காலிங்கராயன் வாய்க்கால் மூலம் 15,743 ஏக்கர் விவசாய நிலங்களும், லோயர் பவானி (Lower Bhavani Project LBP) திட்டத்தின் மூலம் சுமார் 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களும் பாசன வசதி பெற்று வருகின்றன. இதன் மூலம் மொத்தம் சுமார் 2.23 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் இந்த இரு நீர்ப்பாசனத் திட்டங்களையே நம்பியுள்ளன.

இந்தப் பகுதிகளில் தென்னை, மஞ்சள், கரும்பு, வாழை உள்ளிட்ட முக்கியப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரம், உரிய நேரத்தில் பாசன நீர் கிடைப்பதை நேரடியாகச் சார்ந்துள்ளது.

வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் காலிங்கராயன் வாய்க்காலுக்கு ஜூன் 16 ஆம் தேதியும், லோயர் பவானி (LBP) ஆகஸ்ட் 15 ஆம் தேதியும் பாசனத்திற்காக நீர் திறந்துவிடப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, அவர்களின் அவசர நீர்ப்பாசனத் தேவையைக் கருத்தில் கொண்டு அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பின் அடிப்படையில், வழக்கமாக ஆகஸ்ட் 15ஆம் தேதி திறக்கப்படும் லோயர் பவானி (LBP) பாசன நீர் முன்கூட்டியே ஜூலை 31 ஆம் தேதியும் காளிங்கராயன் பாசன நீரும் திறந்துவிடப்பட்டது. இதன் மூலம் சுமார் 2.23 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் பாதுகாக்கப்பட்டதுடன், ஆயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரமும் காக்கப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டு, காலிங்கராயன் வாய்க்காலுக்கான வழக்கமான நீர் திறப்பு நாளைக் கடந்தும், தாமதமாகி வருவதும் லோயர் பவானி (LBP) பாசன நீர் திறப்பு ஆகஸ்ட் 15 கேள்விக்குறியாக இருப்பதால் மொத்தம் சுமார் 2.23 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தென்னை, மஞ்சள், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரமும் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் சூழல் உருவாகியுள்ளது.

கடந்த ஆட்சி காலத்தில் அணையின் நீர்மட்டம் 38 அடியாக இருந்தபோது கூட தண்ணீர் திறக்கப்பட்டது என்பது வரலாறு.

எனவே, ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்ட விவசாயிகளின் நலன், அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் மாநிலத்தின் வேளாண் உற்பத்தியைப் பாதுகாக்கும் உயரிய நோக்கில், போர்க்கால அடிப்படையில் காலிங்கராயன் வாய்க்கால் மற்றும் லோயர் பவானி (LBP) நீர்ப்பாசனத்திற்காக உடனடியாக தண்ணீரை திறந்துவிட சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கி, தேவையான நடவடிக்கைகளை விரைந்து கீழ்பவானி மற்றும் காளிங்கராயன் பாசனத்திற்கு பவானிசாகர் அணையை திறக்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### நுகர்பொருள் வாணிபக் கழக

# நவீன அரிசி ஆலைகளை கூட்டுறவுத் துறைக்கு மாற்றிட முயற்சிப்பதைக் கைவிடக்கோரி ஆர்ப்பாட்டம்!

## மயிலாடுதுறையில் - தொ.மு.ச. பொருளாளர் கோ.சி.வள்ளுவன் பங்கேற்பு!




சென்னை, ஆக. 8 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவங்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கி வரும் 21 நவீன அரிசி ஆலைகளையும், எருக்கூர் ஆலை வளாகத்தில் அமைந்துள்ள நவீன நெல் சேமிப்பு கலனையும் கூட்டுறவுத் துறைக்கு மாற்றிட நுகர்பொருள் வாணிபக் கழகமும், தமிழ்நாடு அரசும் முயற்சி செய்வதை கண்டித்தும், 12(3) ஒப்பந்தப்படி 1500க்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை கொள்முதல் பணியாளர்களைக் கொண்டு நிரப்பிட வலியுறுத்தியும், சுமை தூக்குவோர் கூலியை உயர்வு செய்வது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் தமிழ்நாடு முழுது முள்ள மண்டல அலுவலகங்கள் முன்பாக தொ.மு.ச.வின் இணைப்பு சங்கமான எம்ப்ளாயீஸ் யூனியன் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் 05.08.2026 அன்று நடைபெற்றது.

மயிலாடுதுறையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு பொன்.நக்கீரன் தலைமை வகித்தார். ஆப்ரகாம் லூதர்கிங் அனைவரையும் வரவேற்றார். தொ.மு.ச. பேரவையின் பொருளாளரும் சங்கத்தின் மாநிலத் தலைவருமான கோ.சி.வள்ளுவன் கண்டன உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் கவுன்சில் செயலாளர் எம்.வீரமணி, எம்.சேரன் செங்குட்டுவன், ந.சுந்தர், எம். தமிழழகன், எம்.ஆனந்தராஜ், கே.வேல்முருகன், எம். பாஸ்கர், எல்.பாலசுப்பிரமணியன், ஜெ.ஆளுசேகரன், எம்.ராமன், ஜெ. அய்யப்பன், வி.ரவி, பி.செல்வராஜ் உள்ளிட்ட நிர்வாகி களும், நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

பொருளாளர் வி.பக்கிரிசாமி நன்றி கூறினார்.

### மேற்காசியப் போரினால் எரிபொருள் விலை உயர்வதைத் தடுக்க,

# ஒன்றிய அரசிடம் முன்முயற்சிகள் ஏதேனும் உள்ளதா?

## மாநிலங்களவையில் - எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 8 -

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் 4 ஆகஸ்ட் 2026 அன்று மாநிலங்களவையில் மேற்காசியப் போரின் விளைவாக, பெட்ரோல் டீசல் விலை உயர்வினை தடுக்கும் வகையில் ஒன்றிய அரசு, ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் எரி பொருள் சந்தைகளை பாதுகாக்க ஒன்றிய அரசின் முயற்சிகள் என்னென்ன? என்றும் ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

ஒன்றியஅரசின் நிதித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்தபதில் பின் வருமாறு:

மேற்காசிய போரின் விளைவாக தொடர்ந்து உயர்ந்து வரும், பெட்ரோல் மற்றும் டீசல் விலையேற்றத்தை தடுக்கும் வகையிலும், பயனீட்டாளர்களை பாதுகாக்கும் வகையிலும், கடந்த மார்ச் 2026 முதல் ஒன்றிய அரசு ஒரு லிட்டருக்கு 10 ரூபாய் என்ற அளவுக்கு உற்பத்தி வரியை குறைத்துள்ளது என்றும், இதனால் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு ஏற்பட இருந்த இழப்பு ஓரளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது என்றும், நிதிநிலைச் சுமையிலிருந்து இந்தியப் பொருளாதாரம் ஓரளவு பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும், உலகச் சந்தையின் விலையேற்றத் தின் தாக்கம் ஓரளவிற்கு சமாளிக்கப் பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், கடந்த ஏப்ரல் 2026 நிலவரப்படி ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 138 அமெரிக்க டாலர்கள் என்ற அளவிற்கு விலையேற்றத்தை கண்டுள்ளது என்றும், ஒன்றிய அரசின் பல்வேறு முயற்சிகளால் கச்சா எண்ணெய் பணவீக்கத்தின் அளவு நான்கு சதவீதம் அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும், கச்சா எண்ணெய் விலையேற்றம் உலக சந்தைப் பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்கும் என்பதால், இந்தியப் பொருளாதார சுமையை நீக்கும் வகையிலும், பயனீட்டாளர்களை பாதுகாக்கும் வகையிலும் ஒன்றிய அரசு தேவையான நிதிக் கொள்கைகளை அவ்வப்போது மாற்றிமைத்து மேற்காசிப் போரின் தாக்கம், தனிமனித நிதிச் சுமையை பாதுகாக்கும் வகையில் பல்வேறு முடிவுகளை எடுத்து வருகிறது என்று ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி பதில் அளித்துள்ளார்.

### திருவாரூர் மாவட்டம் –

# திருக்குவளையில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை - மரியாதை!

## என்.கௌதமன் தலைமையில் – உ.மதிவாணன் – கழகத்தினர் கலந்துகொண்டனர்!

நாகை, ஆக. 8 –

முத்தமிழ் அறிஞர்கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி நாகை மாவட்டம் திருக்குவளையில் கலைஞர் சிலைக்கு தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரி யாதை செலுத்தினர்.

நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருக்குவளை இல்லத்தில் அவரது சிலைக்கு நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்கள். இதே போல் கலைஞரின் தந்தை முத்துவேலர், தாயார் அஞ் சுகம், முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் ஆகியோர் சிலைகளுக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், ப.கோவிந்தராசன், திருவாரூர் சோமாஸ்கந்தன், மாவட்ட கழக துணை செயலாளர் கற்பகம்நீலமேகம், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், கோ.சிவக் குமார்,

ஒன்றிய செயலாளர்கள் ஆ. தாமஸ் ஆல்வா எடிசன், சோ. பா.மலர்வண்ணன், கே.பழனியப்பன், மகா.குமார், சிக்கல் என். ஆனந்த், உதயம் வே.முருகையன், பேரூர் செயலாளர்கள் மரியசார்லஸ், முகமதுசுல்தான் ஒன்றிய குழு முன்னாள் தலைவர் தமிழரசி, தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங் கிணைப்பாளர் அ.பரிபாலன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் புவனேஸ்வரி செந்தில், மாவட்ட

தொழிலாளர் அணி தலைவர் என்.மோகன்தாஸ், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் பி.தியாகராஜன், எஸ்.செல்வா, மா.செந்தில், குவளை கணேசன், ஈ.ஜோதிபாசு, வி.ஆர்.சுப்ர மணியன், ஒன்றிய நிர்வாகிகள் வை. சண்முகசுந்தரம், பார்த்திபன், சுரேஷ் , நிமல் வடக்குபொய்கை நல்லூர் திருநாவுகரசு, ஒன்றிய இளைஞரணி ஆர்.குமார், தியாகராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

**திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்**

**ஆ. சஞ்சீவிராயன்**

**ஆகஸ்ட் 8 (2021)**



**1964ஆம் ஆண்டு கழகத்தில் உறுப்பினராகி 55 ஆண்டுகளுக்கும் மேலாக கழகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாவட்டத்தில் எழும்பூர் மற்றும் திரு.வி.க.நகர் பகுதிகளில் 68வது வட்டம், 97வது வட்டம் ஆகிய வட்டச் செயலாளராகவும் மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**